# Chapter 3.6

# திருக்குறள்

---

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**Question 1.**
………….. தீமை உண்டாகும்.
அ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்வதால்
ஆ) செய்யத்தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
இ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
ஈ) எதுவும் செய்யாமல் இருப்பதால்

**Answer:**
இ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்

**Question 2.**
தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புவரிடம் ……….
இருக்கக் கூடாது.
அ) சோம்பல்
ஆ) சுறுசுறுப்பு
இ) ஏழ்மை
ஈ) செல்வம்

**Answer:**
அ) சோம்பல்

**Question 3.**
‘எழுத்தென்ப என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
……………………..
அ) எழுத்து + தென்ப
ஆ) எழுத்து + என்ப
இ) எழுத்து + இன்ப
ஈ) எழுத் + தென்

**Answer:**
ஆ) எழுத்து + என்ப

**Question 4.**
‘கரைந்துண்ணும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …
அ) கரைந்து + இன்னும்
ஆ) கரை – துண்ணும்
இ) கரைந்து + உண்ணும்
ஈ) கரை + உண்ணும்

**Answer:**
இ) கரைந்து + உண்ணும்)

**Question 5.**
கற்றனைத்து + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ……….
அ) கற்றனைத்தூறும்
ஆ) கற்றனைதூறும்
இ) கற்றனைத்தீறும்
ஈ) கற்றனைத் தோறும்

**Answer:**
அ) கற்றனைத்தூறும்

## பொருத்துக

1. கற்கும் முறை – செயல்
2. உயிர்க்குக் கண்கள் – காகம்
3. விழுச்செல்வம் – பிழையில்லாமல் கற்றல்
4. எண்ணித் துணிக – எண்ணும் எழுத்தும்
5. கரவா கரைந்துண்ணும் – கல்வி

**Answer:**
1. கற்கும் முறை – பிழையில்லாமல் கற்றல்
உயிர்க்குக் கண்கள் – எண்ணும் எழுத்தும்
3. விழுச் செல்வம் – கல்வி
4. எண்ணித்துணிக – செயல்
5. கரவா கரைந்துண்ணும் – காகம்

## குறுவினா

**Question 1.**
நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும் எப்போது?

**Answer:**
நாம் ஒருவருடைய பண்பை அறிந்து நன்மை செய்ய வேண்டும் இல்லையென்றால்
நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும்.

**Question 2.**
தீமை உண்டாக்கும் இரண்டு செயல்களை எழுதுக.

**Answer:**
தீமை உண்டாக்கும் இரண்டு செயல்கள் செய்யத்தகாத செயல்களைச் செய்தல்
செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுதல்.

**Question 3.**
துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

**Answer:**
துன்பம் வரும் போது வருந்திக் கலங்காதவர். அந்தத் துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் ஆவர்.

பாடப்பகுதியிலிருந்து படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக





---------- -------- -------- ----------

---------- -------- --------.






---------- -------- -------- ----------

---------- -------- --------.

Answer:

1 0 2 3 8

அ ஆ க ச ட த



எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.